இருபது வருடங்களாக சில பேர்கள் ப்ரமோஷன் இல்லாமல் இருக்கிறார்கள் என்றால்—முறைப்படி அவர்களுக்கும் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இப்போது பஞ்சாயத்து யூனியன்களுக்கு கிராண்டே அதிகமாகக் கொடுப்பதில்லை. இருக்கிற ஆபீசர்களுக்கும் வேலை இல்லாமல் இருக்கிறது. அப்படி இருக்க அடிஷனல் பி.டி.ஓ. என்று போட வேண்டிய அவசியம் என்ன ? இந்த முறையையே எடுத்துவிடுவார்களா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் தர்மபுரி மாவட்ட உறுப்பினர் போட்ட கேள்வியைக் கவனிக்க வேண்டும். இவர்களுக்கு வேலை இல்லை என்கிறார். அவர்களுக்கு அதிக வேலை இருப்பதனால் அடிஷனல் பி.டி.ஓ. என்று போட வேண்டும் என்கிறார். அந்த அந்த ஊராட்சி ஒன்றியங்களின் நிலையைப் பொறுத்துத்தான் இது தீர்மானிக்கப்படுகிறது.

மண்டபம் வட்டார ஆசிரியர்களின் சம்பளம்

மு.ப. 9–30 ***183 வினா :—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பிளாக்கில் பணிபுரியும் பஞ்சாயத்து யூனியன் பள்ளியாசிரியர்களுக்கு 1968 ஜனவரி மாதத்திலிருந்து சம்பளம் அளிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனின், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : (அ) ஆம். ஆனால் நிலுவைச் சம்பளம் மார்ச்சு மாதம் கொடுக்கப்பட்டது.

(ஆ) மண்டபம் கூட்டாட்சி மன்றத்தில் நிதிநிலை சரியில்லை. பஞ்சப்படி மானியம் பிப்ரவரியில் கிடைத்தது. ஆகையால் மார்ச்சு 1ம் தேதி பள்ளியாசிரியர்களுக்கு சம்பளம் அளிக்கப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களைப் போலவே ஊராட்சி ஒன்றியங்கள் நடத்துகின்ற பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் சம்பளம் சரியாகக் கிடைப்பதில்லை, என்ற புகார்கள் அடிக்கடி வருகின்றன. அப்படிப்பட்ட புகார்கள் வராமல் இருக்கக் கூடிய முறையில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் சரியாகக் கிடைக்கக்கூடிய வகையில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் 7 ஊராட்சி ஒன்றியங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாகவும், உள்ளூர் வரித் திட்டத்தின்கீழ் சரியாக வசூல் செய்யாததால் பணத் தட்டுப்பாடு இருப்பதாகவும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு ஆண்டு ஆண்டுக்கு லட்சக் கணக்கான ரூபாய்கள் மானியங்கள் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. நிரந்தரமாக இதற்குப் பரிகாரம் காணுவதற்கு ஆராயப்பட்டு வருகிறது. ஏற்கனவே இதுபற்றிய கேள்விகள் கேட்கப்பட்டு விடைகளும் தரப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. மார்டின் : நெல்லை மாவட்டத்தில் சில பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்த வரையில் லோக்கல் செஸ் எவ்வளவு போட முடியுமோ, அவ்வளவு போட்டும் நிதிப் பற்றுக்குறை இருப்பதால் ஆசிரியர்களுக்குச் சரியாகச் சம்பளம் வழங்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே, நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கல்வி இலாகாவிலிருந்து தரக்கூடிய வகையில் செயற்குறிப்பு எதுவும் நடப்பு ஆண்டிலாவது இருக்கிறதா ?